

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மாதவரம் மற்றும் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### "தமிழ்நாடு யாருடன் போராடும்?"

## ஆளுநருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

### துண்டறிக்கையாக செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் விநியோகம்!

செஞ்சி, அக்.19-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவியின் கேள்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதில் அளித்த துண்டறிக்கையைபொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி கோணை, மேல் எடையாளம் ஊராட்சியில் நடைபெற்றது.


நிகழ்ச்சிக்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.


நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவியின் கேள்விக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் அடங்கிய துண்டு பிரசுரங்களை வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் வழங்கி முதலமைச்சர் சொன்ன பதிலை பொதுமக்களிடம் விளக்கி கூறினார்.

### சாலை விபத்தில் மரணமடைந்த நாமக்கல் கிழக்கு - காஞ்சி தெற்கு மாவட்ட

# கழகத் தோழர்கள் இருவரின் குடும்பங்களுக்கு - தலா ரூ. 10 இலட்சம்!

## கழகம் சார்பில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!




**சென்னை, அக்.19-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரண்ராஜ் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் எஸ்.பிரகாசம் ஆகிய இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 20 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 8 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.80 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.**

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், கடந்த 2.8.2025 அன்று விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா 12.6.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் 23.7.2025 அன்று ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் 5.6.2025 அன்று திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ் 5.6.2025 அன்று கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி 23.7.2025 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் ஆகிய 6 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து; 2.6.2025 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கு. சரண்ராஜ் அவர்கள், நாமக்கல் சேந்தமங்கலம் சாலை, வீசாணம் பிரிவு ரோடு அருகில் வாகன விபத்தில் சிக்கியும் 6.9.2025 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான எஸ்.பிரகாசம் அவர்கள், கீழ்அம்பி காஞ்சிபுரம் சாலையில் இடதுபுறம் சென்றபோது வாகனம் மோதியும் சம்பவ இடத்திலேயே இவ்விரண்டு பேரும் உயிரிழந்து விட்டனர்.

விபத்தில் சிக்கி உயிரிழந்த மேற்சொன்ன இருவரின் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூபாய் 20 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரண்ராஜ் அவர்களின் மனைவி திருமதி ச.ராசாத்தி அவர்களிடமும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் எஸ்.பிரகாசம் அவர்களின் மனைவி திருமதி பி. பிரியா அவர்களிடமும் நேற்று (18.10.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில்

## கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு - கோதுமை மாவு விற்பனை!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, அக். 19-*

கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில் காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு மற்றும் காஞ்சி கோதுமை மாவு ஆகியவற்றின் விற்பனையை BLINKIT விரைவு வணிக தளத்தில் தொடங்கி வைத்தார்கள்.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில், கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகள் விரைவு வணிகம் (Quick Commerce) வாயிலாக பொதுமக்களின் இல்லங்களுக்கே நேரடியாக விநியோகம் செய்யப்படும் என அறிவித்தார்கள்.

கூட்டுறவுப் பண்டகசாலைகள், பொதுமக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் நுகர்வுப் பொருட்கள் தரமானதாகவும், நியாயமான விலையிலும் விற்பனை செய்து வருகின்றது. இந்நுகர்வுப் பொருட்களை வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று விநியோகம் செய்யும் வகையில் விரைவு வணிக முறை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்புக்கு ஏற்றவாறு முதற்கட்டமாக காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி பாசுமதி அரிசி (1Kg), காஞ்சி கேழ்வரகு மாவு (500g), காஞ்சி நாட்டுச் சர்க்கரை (500g), காஞ்சி கோதுமை மாவு (500g), கம்பு மாவு (500g) மற்றும் கடலை மாவு (250g) ஆகியவை விரைவு வணிக தளங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் (17.10.2025) முதற்கட்டமாக காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு மற்றும் காஞ்சி கோதுமை மாவு ஆகியவற்றின் விற்பனையை Blinkit விரைவு வணிக தளத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்கள்.

இச்சேவையினை பெற பொதுமக்கள் தங்களது கைப்பேசியில் Blinkit என்ற விரைவு வணிக மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்து, அதன்மூலம் கூட்டுறவுப் பொருட்களை ஆர்டர் செய்துகொள்ள வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பொருட்களை ஆர்டர் செய்ய Blinkit விரைவு வணிக தளத்தில் search-ல் கூட்டுறவுப் பொருட்களை உள்ளீடு செய்து ஆர்டர் செய்து கொள்ளலாம். உதாரணமாக "Kanche Ragi flour" என உள்ளீடு செய்து காஞ்சி கேழ்வரகு மாவினை ஆர்டர் செய்து கொள்ளலாம். மேலும், அடுத்தடுத்து பிற கூட்டுறவுப் பொருட்களும் விரைவு வணிக தளத்தில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, சென்னையில் வசிக்கும் பொதுமக்கள் மேற்காண்ட கூட்டுறவுத் தயாரிப்புகளை குறைந்த விலையில், தரமானதாக Blinkit விரைவு வணிக தளத்தில் தங்கள் இல்லங்களுக்கே ஆர்டர் செய்து, வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். க.நந்தகுமார் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித், இணைப் பதிவாளர் சிவக்குமார் உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில் காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு மற்றும் காஞ்சி கோதுமை மாவு ஆகியவற்றின் விற்பனையை BLINKIT விரைவு வணிக தளத்தில் தொடங்கி வைத்தார்கள். உடன் சத்யபிரத சாகு, டாக்டர்.க.நந்தகுமார், சா.ப.அம்ரித், சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 12 நபர்களுக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் வழங்கினார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வானதி ஆகியோர் உடன் பங்கேற்றனர்.